**Starting time 11.20.A.M.**

# IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.

## O.S. No.29/2019

Deposition of **D.W.2** witnesses for defendant Solemnly affirmed by Tr.R.Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 14.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **தசரதன்** | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Calling | : | Age | : |

**2–ம் பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை :** நான் இவ்வழக்கிற்கு 3–ம் தரப்பினர். நான் திருத்தணி வட்டம், முருக்கம்பட்டு கிராமத்தில் வசிக்கிறேன். வாதி மற்றும் 2–ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு எங்கள் ஊர் தான் பூர்வீக கிராமம், பிறக அவர் பெருமாள்ராஜ்பேட்டையில் குடிபெயர்ந்து சென்றுவிட்டார். நான் முருகம்பட்டு கிராமத்தில் வசிப்பதற்கு ஆதரமாக எனது ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அசலை சரிபார்க்க ஒப்படைக்கிறேன். ஆதார் அட்டையின் நகல் **Ex.X1**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தகப்பனார் பெயர் பெருமாள் ஆகும். அவரும் முருகம்பட்டு கிராமத்தில் தான் வசித்து வந்தார். எனது தகப்பனாரின் ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அசலை சரிபார்க்க ஒப்படைக்கிறேன். ஆதார் அட்டையின் நகல் **Ex.X2**–ஆக குறியீடு

செய்யப்படுகிறது.

2. எனது தகப்பனார் என் பெயரில் கடந்த 14.02.2012 அன்று ஒரு செட்டில்மெண்ட் பத்திரத்தை எழுதி பதிவு செய்துக் கொடுத்தார். அந்த ஆவணத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் என் தகப்பனார் கையொப்பம் உள்ளது. அந்த ஆவணத்தின் ஜெராக்ஸ் நகலை தாக்கல் செய்கிறேன். அசலை சரிபார்க்க ஒப்படைக்கிறேன். அந்த ஆவணம் **Ex.X3**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது தகப்பனார் கடந்த 06.07.2019 அன்று காலமாகிவிட்டார். அவரது இறப்பு சான்று நகலை தாக்கல் செய்கிறேன். அசலை சரிபார்க்க ஒப்படைக்கிறேன். அந்த ஆவணம் **Ex.X4**–ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து எனது தகப்பனாரின் கையெழுத்து ஆகும். அந்த கையெழுத்து **பி.வா.சா.ஆ.11**–ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கின் தரப்பினர்கள் யார், யார் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது. இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால், தெரியாது. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்தை நீல நிற பேனாவால் போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.11 கையெழுத்துக்கும், Ex.X3– ஆவணத்தில் உள்ள எனது தகப்பனாரின் கையெழுத்துக்கும் வித்யாசம் உள்ளது என்றால், இல்லை. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள வாசகங்கள் அனைத்தும் கறுப்பு நிற போனாவால் தான் எழுதப்பட்டுள்ளது என்றும், எனது தகப்பனாரின் கையெழுத்து என்று சொல்லும் கையெழுத்து மட்டும் வழக்கிற்காக வேண்டி பின்னிட்டு போடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

2. நீதிமன்றத்தில் இன்று ஆஜராகியுள்ள வாதி மற்றும் 2–ம் பிரதிவாதி எனது பெரியப்பா மகள்களா என்றால், பங்காளி முறை உறவு ஆகும். 2–ம் பிரதிவாதி எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

2–ம் பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

Ending time : 11.36. A.M.

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Date: 2025.08.14 15:17:52 +0530